Dr. A.HENDRY
Founder - National President

# FEDERATION OF ALL INDIA REAL ESTATE ASSOCIATION

Reg.No.484/2012

No.23/12, Basement, Asian Apartments, 1st Cross Street,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024

www.faira.co.in
73052 58889/fairadmn@gmail.com FAIRA-

FAIRA

FAIRA கடித எண்: 042/2025 தேதி:10.02.2025.

பெறுநர்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை- 600 009.

பொருள்: பதிவுத் துறையின் பணிகள் தொடர்ந்து ,விரைந்து, தடை இல்லாமல் நடைபெறும் வண்ணம் விடுப்பில் சென்றுள்ள பதிவுத் துறை தலைவருக்கு மாற்றாக நிரந்தர அல்லது தற்காலிக தலைவரை நியமிக்க கோரி கடிதம்;-

பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எமது பணிவான வணக்கங்கள்...

தமிழகத்திலேயே மிகப்பெரிய அளவில் நேரடி வருவாய் ஈட்டக்கூடிய துறைகளில் ஒன்றாக பதிவுத்துறை திகழ்கிறது. இத்தகைய முக்கியமான துறையின் சமீபகாலமான செயல்பாடுகள் மற்றும் மக்களுக்கான சேவைகள் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் இல்லை என்பது அனைவரும் கருத்தாக உள்ளது.

இத்தருணத்தில் கடந்த 03.02.2025 திங்கட்கிழமை முதல் பதிவுத் துறையினையின் தலைமை பொறுப்பினை ஏற்று நிர்வகிக்கக்கூடிய பதிவுத் துறை தலைவர் (Head of the Department) மற்றும் தலைமை கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரியாக (Chief Controlling Revenue Authority) பொறுப்பினை வகித்து வந்த பதிவுத்துறை தலைவர் அவர்கள் உடல் நலமில்லாத காரணத்தினால் ஒரு மாத காலத்திற்கு விடுப்பில் சென்றுள்ளதாக தெரிகிறது.

அவரது விடுப்புக்கான காரணம் குறித்து துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்களிடையே நிலவி வரும் பலதரப்பட்ட கருத்துக்கள் சர்ச்சையை உண்டு பண்ணி உள்ளது. காரணம் ஒரு தரப்பினர் அவர் விருப்பத்தின் பேரில் விடுப்பில் சென்றுள்ளதாக கூறி வருகின்றனர்.

மற்றொரு தரப்பினர் சமீப காலமாக பதிவுத் துறை தலைவர் அவர்களின் மேல்நிலை நேரடி பொறுப்பில் உள்ள IAS அதிகாரிகளின் செயல்பாடுகளால் மன அழுத்தத்திற்கு உள்ளாகி, மிக நெருக்கடியான சூழலில் இருந்ததாக கூறுகின்றனர். மேலும் இதன் காரணமாக அவரால் நிர்வாக ரீதியாக எந்த ஒரு செயல்திட்டங்கள், நிர்வாக மற்றும் துறை சார்ந்த முடிவுகளை எடுக்க முடியாமல் கடும் நெருக்கடிக்கும் உள்ளானதாக தெரிய வருகிறது.



FEDERATION OF ALL INDIA REAL ESTATE ASSOCIATION
Reg.No.484/2012
No.23/12, Basement, Asian Apartments, 1st Cross Street,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024
Dr. A.HENDRY
Founder - National President
www.faira.co.in
73052 58889/fairadmn@gmail.com
FAIRA-
FAIRA

இத்தகைய நெருக்கடிகளை சந்தித்து பணியாற்றி வந்ததாகவும் மேலும் இவரின் மேல்நிலை நேரடி பொறுப்பில் உள்ள ஐஏஎஸ் அதிகாரிகள் இவரை அவமரியாதை செய்ததன் காரணமாக சுயமரியாதை கருதி தன்மானத்தை சீர்குலைக்கும் வகையில் அவமரியாதையாக நடத்தப்பட்டதின் காரணமாக மன உளைச்சலுக்கு உள்ளாகி விடுப்பில் சென்றுள்ளதாக மறுதரப்பினர் கூறுகின்றனர்.

மேற்கூறிய காரணங்களை குறித்து விவாதிக்கவோ அல்லது விளக்கம் தெரிந்து கொள்வதற்கான முக்கியத்துவம் இல்லை. ஆனால் தலைவர் என்பவர் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர். அதாவது வீடு தொடங்கி நாடு வரை உதாரணத்திற்கு கல்வி,விளையாட்டு,கட்சி,இயக்கம் என கூறி கொண்டே போகலாம். மேலும் கடவுள் நம்பிக்கை உள்ள ஆத்திகர்களுக்கும் தலைவர்கள் உண்டு. கடவுள் மறுப்பாளர்களான நாத்திகர்களுக்கும் தலைவர்கள் உண்டு. அதுமட்டுமல்லாமல் மனிதர்களைப் போல ஐந்தறிவு உயிரினங்களுக்கும் தலைவர்கள் மிக முக்கியமானவர்களாக திகழ்கிறார்கள்.

சமீபத்தில் பதிவுத்துறை தலைவர் அவர்கள் உடல்நிலை சரி இல்லாமல் ஒரு மாத விடுப்பில் சென்றுள்ள காரணத்தினால் அவர் நிர்வகித்து வந்த பணிகளில் மிகப்பெரிய தொய்வு ஏற்பட்டுள்ளது.

அதாவது மனிதனின் அடிப்படை தேவைகளான வீடு மற்றும் வேளாண்மைக்கு பயன்படுத்தக்கூடிய நிலங்கள், வீட்டு மனை பிரிவுகளை வாங்குவது விற்பது, எதிர்கால தேவை கருதி வீட்டுமனை பிரிவுகளில் முதலீடு செய்வது போன்றவைகள் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் மிக முக்கியமான நிகழ்வுகளாகும்.

ஆகவே மேற்கூறிய நிகழ்வுகள் நடைபெறும் பொழுது ஏற்படுகின்ற பிரச்சனைகள், சிக்கல்கள், வழக்குகள், முத்திரை தீர்வை, முத்திரை மற்றும் பதிவுக் கட்டணங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை தலைமை ஏற்று கண்காணிப்பது, நிர்வாக பிரச்சனைகள், பணியாளர்கள் இடமாற்றம், குறைவு முத்திரை தீர்வை, நீதிமன்ற வழக்குகள் மற்றும் தணிக்கை சம்பந்தமாக கண்காணிப்பது விசாரணை மேல்முறையீடு போன்ற முக்கியமானவர்களை கண்காணிப்பது தான் பதிவுத்துறை தலைவரின் முக்கிய பணியாக உள்ளது.

மேலும் அனைத்து துறைகளிலும் அத்துறை சம்பந்தப்பட்ட தலைவர் விடுப்பில் செல்லும் போது அவர் மேற்கொண்டு செயலாற்றி வந்த பணிகளில் தொய்வு ஏற்படாத வண்ணம் அத்துறை சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்கள், நிர்வாக செயல்பாடுகள் குறித்த புரிதல் உள்ள அதிகாரியை தற்காலிகமாக பொறுப்பில் நியமித்து மேற்கூறிப்பட்ட பணிகளை தடையின்றி தொடர்ந்து நடைபெறும் வகையில் வழிவகை செய்வது வழக்கமான ஒன்று.

Dr. A.HENDRY
Founder - National President



பதிவுத் துறையின் தலைவர் ஒரு மாத விடுப்பில் சென்றுள்ளதன் காரணமாகவும் மற்றும் அவர் மேற்கொண்டு வந்த பொறுப்புகளுக்கு இது நாள் வரை யாரும் நியமிக்கப்படாததின் காரணமாகவும் பதிவுத்துறையின் நிர்வாகம் மற்றும் அலுவல் சம்பந்தப்பட்ட பணிகள் சரியான முறையில் நடைபெறாமல் தொய்வு ஏற்பட்டு, மந்தகதியில் நடைபெறும் காரணத்தினால் பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய சேவைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டு மக்கள் பொதுமக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகி உள்ளனர். இதன் காரணமாக தமிழக அரசுக்கு பதிவுத் துறையின் மூலம் கிடைக்கக்கூடிய வருவாயில் பெரும் இழப்பு ஏற்பட்டு வருகிறது. மேலும் இந்நிலை தொடர்ந்தால் இன்னும் மோசமான சூழலுக்கு பதிவுத்துறையின் செயல்பாடுகள் தள்ளப்படும் என்கின்ற அச்ச உணர்வும் பொதுமக்கள் மத்தியில் நிலவுகிறது

ஆகவே மேற்கூறிய அனைத்து நிர்வாக செயல்பாடுகளை செயல்படுத்த வேண்டிய மிக முக்கிய பொறுப்பும், கடமையும் பதிவுத் துறை தலைவருக்கு உண்டு என்கின்ற காரணத்தின் அடிப்படையிலும் மற்றும் தற்பொழுது பதிவுத் துறையில் நிலவுகின்ற சூழலையும் கவனத்தில் கொண்டு, தமிழ்நாடு பதிவுத் துறைக்கான நிரந்தர அல்லது தற்காலிக தலைவரை விரைந்து நியமித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடி தீர்வு காண வேண்டும் என பொதுமக்கள் மற்றும் ஃபெயிரா கூட்டமைப்பின் சார்பாக பணிவன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி!

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,

ஆ.ஹென்றி,
நிறுவனர் – தேசியத் தலைவர்
FAIRA.

நகல்:

1) உயர்திரு தலைமை செயலாளர் அவர்கள்,

2 மாண்புமிகு தமிழ்நாடு வணிகவரி மற்றும்
பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்,

3) உயர்திரு வணிகவரி மற்றும்
பதிவுத் துறை செயலாளர் அவர்கள்,